# நமது தின கனி
காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 166 | 4 Pages | 18.1.2024 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 166 | 4 பக்கங்கள் | 18.1.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## துருக்கி: நெடுஞ்சாலையில் பஸ் கவிழ்ந்து விபத்து 9 பேர் பலி



அங்காரா, ஜன.18

துருக்கி நாட்டின் முஹ்லா மாகாணம் மர்மரிஸ் மாவட்டத்தில் இருந்து மெர்டின் மாகாணம் நோக்கி பஸ் நேற்றி சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்சில் 39 பேர் பயணித்தனர்.

மெர்சின்மாகாணம்யென்கஸ்பகுதியில்நெடுஞ்சாலையில்சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை பஸ் சாலைநடுவே இருந்த தடுப்புச்சுவர் மீது மோதி தலைகுப்பற கவிழ்ந்து விழுந்தது. இந்த கோர விபத்தில் பஸ் பயணிகள் 9 பேர் உயிரிழந்தனர். மேலும், 30 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். மேலும், இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## போருக்காக 15 பில்லியன் டாலர் கூடுதல் நிதி ஒதுக்க இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல்



டெல் அவிவ், ஜன.18

இஸ்ரேல் மீது காசாவின் ஹமாஸ் அமைப்பினர் கடந்த அக்டோபர் 7ந்தேதி திடீர் தாக்குதலை நடத்தி சுமார் 250 பேரை பிணைக்கைதிகளாக பிடித்துச்சென்றனர். இதற்குபதிலடியாகஇஸ்ரேல்ராணுவம்காசாவிற்குள் நுழைந்து முழு அளவிலான போரில் ஈடுபட்டு வருகிறது. இதில் காசாவில் இதுவரை சுமார் 24 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதாக காசா சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்ஹமாஸ் இடையே நீடித்து வரும் போர் 100 நாட்களைக் கடந்துள்ள நிலையில், போருக்காக இஸ்ரேல் அரசின் பட்ஜெட்டில் கூடுதல் நிதி ஒதுக்குவதற்கான சட்டத்திருத்தம், அந்நாட்டின் நாடாளுமன்றத்தில்கொண்டுவரப்பட்டது. இதுகுறித்துஅமைச்சரவையில் நீண்ட நேரம் விவாதம் நடைபெற்றது.

இறுதியில் நடப்பாண்டில் போருக்கு மட்டும் 15 பில்லியன் அமெரிக்க டாலர் நிதி ஒதுக்குவதற்கான சட்டத்திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது இந்திய மதிப்பில் சுமார் 1 லட்சத்து 24 ஆயிரத்து 228 கோடி ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் மீது ஏவுகணை தாக்குதல் நடத்திய ஈரான் பதற்றம்



தெஹ்ரான், ஜன.18

ஈரான் பாதுகாப்புப்படையில் ஈரான் புரட்சிப்படை என்ற பிரிவு உள்ளது. இந்த புரட்சிப்படை ஈரானின் நலனுக்காக வெளிநாடுகளில் பல்வேறு ராணுவ, அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள உருவாக்கப்பட்டது. இந்த புரட்சிப்படை பிரிவில் 'குவாட்ஸ்' என்ற சிறப்பு படை உள்ளது. இந்த குவாட்ஸ் பிரிவு வெளிநாடுகளில் உளவு, ரகசிய ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வேலையில் ஈடுபட்டு வருகிறது.

இதனிடையே, ஈரான் புரட்சிப்படையின் தளபதி குவாசம் சுலைமானி கடந்த 2020ம் ஆண்டு ஈராக்கில் அமெரிக்க படையினர் நடத்திய டிரோன் தாக்குதலில் கொல்லப்பட்டார். குவாசம் சுலைமானியின் நினைவு தினம் கடந்த 3ம் தேதி ஈரானின் கெர்மன் நகரில் அனுசரிக்கப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். அப்போது, திடீரென இரட்டை குண்டுவெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில் 84 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இதையடுத்து, ஐஎஸ் பயங்கரவாத அமைப்பு மற்றும் ஈரானுக்கு எதிராக செயல்படும் அமைப்புகளை குறிவைத்து ஈரானின் புரட்சிப்படை தாக்குதலை தொடங்கியுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் மீது ஈரான் நேற்று தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணம் குஹி சாப் நகரில் உள்ள ஜெய்ஷ் உல் அடெல் பயங்கரவாத குழுவை குறிவைத்து ஈரான் புரட்சிப்படை நேற்று ஏவுகணைமற்றும்டிரோன்தாக்குதல்நடத்தியது. இந்ததாக்குதலில் எத்தனைபேர் உயிரிழந்தனர் என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை. பாகிஸ்தானில் ஈரான் தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தி.மு.க. இளைஞரணி மாநாடு சுடர் தொடர் ஓட்டம்: அமைச்சர் இன்று தொடங்கி வைக்கிறார்

சென்னை, ஜன.18

தி.மு.க. இளைஞரணி மாநாடு சேலத்தில் வருகிற 21ந் தேதி மிகப் பிரமாண்டமாக நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் 5 லட்சத்துக்கும் அதிகமான நிர்வாகிகள் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் நடந்து வருகிறது. தி.மு.க. இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு நடைபெறும் மாநாடு என்பதால் இதை வெற்றி மாநாடாக நடத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது. இந்த மாநாட்டையொட்டி சென்னையில் இருந்து மாநாட்டுக்கு சுடர் தொடர் ஓட்டம் இன்று தொடங்கி வைக்கப் படுகிறது. அண்ணாசாலை சிம்சன் சந்திப்பு அருகே காலை 7 மணியளவில் நடைபெறும் சுடர் தொடர் ஓட்டத்தை இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜோயல் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் திரளாக பங்கேற்கிறார்கள். இந்த சுடர் தொடர் ஓட்டம் அண்ணாசாலை, பிலால் ஓட்டல், ஸ்பென்சர் சிக்னல், ஆயிரம் விளக்கு மெட்ரோ, ஆயிரம் விளக்கு மசூதி, அண்ணா மேம்பாலம் அமெரிக்க தூதரகம், அண்ணா அறிவாலயம், அன்பகம் சைதாப்பேட்டை, நந்தனம் கலைக் கல்லூரி, கிண்டி கத்திபாரா, ஆலந்தூர் மெட்ரோ, மீனம்பாக்கம், பல்லாவரம், தாம்பரம், பெருங்களத்தூர், வண்டலூர், சிங்க பெருமாள் கோவில், செங்கல்பட்டு, மதுராந்தகம், மேல் மருவத்தூர், அச்சரப்பாக்கம், திண்டிவனம், மயிலம், விக்கிரவாண்டி, விழுப்புரம், அரசூர், உளுந்தூர்பேட்டை, தியாகதுருகம், கள்ளக்குறிச்சி, சின்ன சேலம், தலைவாசல் ஆத்தூர் வழியாக பெத்த நாயக்கன் பாளையத்துக்கு 20ந் தேதி மதியம் 1.30 மணிக்கு சென்றடைகிறது. சேலம் மாநாட்டு திடல் முன்பு மாநாட்டு சுடரை மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜோயல் மற்றும் துணைச் செயலாளர்கள் பெற்றுக்கொண்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் ஒப்படைப்பார்கள். மாநாட்டுச் சுடர் ஓட்டம் செல்லும் இடங்களில் எல்லாம், அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் சிறப்பானவரவேற்பு அளிக்கப்பட உள்ளது. மாநாட்டு சுடர் தொடர் ஓட்டத்தில் பங்கு பெற்று சுடர் ஏந்தி செல்ல மாவட்ட மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் இளைஞரணி நிர்வாகிகள் ஆகியோர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட உள்ளது.

## முனியாண்டி கோவிலில் 100 ஆடு, 50 கோழிகள் பலியிட்டு வழங்கப்பட்ட அசைவ அன்னதான விருந்து



திருமங்கலம், ஜன.18

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே எஸ்.கோபாலபுரம் கிராமத்தில் புகழ்பெற்ற முனியாண்டி சாமி கோவில் அமைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பொங்கலுக்கு மறுநாளான மாட்டு பொங்கல் அன்று இங்கு பொங்கல் விழா மற்றும் அசைவ அன்னதான விருந்து நடைபெறும். இந்தாண்டு கோபலாபுரம் முனியாண்டி சாமி கோவிலில் 61 வது பொங்கல்விழாமற்றும்அசைவ அன்னதான விழா கடந்த 8ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகள், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, மும்பை, புதுச்சேரி மற்றும் மலேசியா, துபாய் உள்ளிட்ட வெளிநாடுகளில் மதுரை முனியாண்டி விலாஸ் ஓட்டல் உரிமையாளர்கள் பலரும் இந்த திருவிழாவில் குடும்பத்துடன் கலந்து கொள்வது வழக்கம். நேற்று கோபாலபுரம் முனியாண்டி சாமி கோவிலில் பொங்கல் விழா நடைபெற்றது.

இதனையொட்டி நேற்று காலை 250 பெண்கள் பால் குடம் எடுத்து கிராமத்தின் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலமாக வந்து சாமிக்கு குடம்குடமாக அபிஷேகம் செய்தனர். பின்னர் பக்தர்கள் நேர்த்திக்கடனாக செலுத்திய 100 ஆட்டு கிடாய்கள், 150 கோழிகளை கொண்டு கமகம அசைவ அன்னதானம் தயாரிக்கப்பட்டது. 60 மூட்டை அரிசியில்தயாரானஅசைவ உணவு நேற்று காலை முதல் மதியம் வரை பக்தர்களுக்கு வழங்கப்பட்டது.

கோபாலபுரம், செங்கப்படை, புதுப்பட்டி, குன்னத்தூர், திருமங்கலம், டி.கல்லுப்பட்டி, திருமங்கலம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த அசைவ அன்னதானத்தில் கலந்து கொண்டு சாப்பிட்டனர். இதனை தொடர்ந்து நேற்று மாலை 4 மணியளவில் கோபாலபுரம் நாட்டாமை வீட்டிலிருந்து சாமிக்கு அபிஷேகம் செய்ய மலர்தட்டு ஊர்வலம் புறப்பட்டது.

இதில் சுற்றுவட்டாரத்தினை சேர்ந்த பொதுமக்கள், முனியாண்டி விலாஸ் ஓட்டல் உரிமையாளர்களின் குடும்பத்தினர் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டனர்.

தாம்பூல தட்டில் தேங்காய், பூ, பழம் வைத்து நாட்டாண்மை வீட்டிலிருந்து ஊர்வலமாக கோவிலுக்கு கிளம்பினர். இந்த மலர் தட்டு ஊர்வலத்தின் முன்பு ஏராளமான சிறுவர்கள், பெரியவர்கள் சிலம்பம் சுற்றியபடி வந்தனர். பல பெண்கள் சாமியாடினர்.

மலர் பூந்தட்டு ஊர்வலம் மாலை 6 மணிக்கு முனியாண்டி கோவிலை அடைந்தது. அங்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதுகுறித்து திருப்பூரை சேர்ந்த முனியாண்டி விலாஸ் ஓட்டல் உரிமையாளரும், கோபாலபுரம் முனியாண்டி சாமி கோவில் நிர்வாகியுமான ராமமூர்த்தி கூறுகையில், தமிழகம் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளில் முனியாண்டி விலாஸ் ஓட்டல் நடத்தும் உரிமையாளர்கள் அனைவரும் மாட்டு பொங்கல் அன்று நடைபெறும் முனியாண்டி சாமி கோவில் திருவிழாவில் பங்கேற்போம்.

நேர்த்திக்கடனாக ஆடுகளை செலுத்தி அசைவ அன்னதானம் நடைபெறும். எங்கள் ஓட்டலின் தினசரி முதல் வருவாயை உண்டியலில் சேகரித்து இந்த திருவிழாவிற்கு பயன்படுத்துவோம். எங்கள் தொழில் சிறப்பாக நடைபெறவும், மக்கள் மகிழ்ச்சியுடன் வாழவும் இந்த திருவிழாவில் கலந்து கொள்கிறோம் என்றார்.

## வன்னியன் விடுதியில் ஜல்லிக்கட்டு: 800 காளைகள், 300 வீரர்கள் பங்கேற்பு

ஆலங்குடி:, ஜன.18

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே வன்னியன் விடுதியில்ஜல்லிக்கட்டு இன்று (ஜன.17) உற்சாகமாக நடைபெற்று வருகிறது.

தமிழகத்தின் அதிக இடங்களில் ஜல்லிக்கட்டு நடைபெறும் மாவட்டமாகவும், ஒரே ஜல்லிக்கட்டில் அதிக எண்ணிக்கையிலான காளைகள் (2,000) கலந்துகொண்ட மாவட்டமாகவும், ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு நடைபெறும் மாவட்டமாகவும் புதுக்கோட்டை திகழ்கிறது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே வன்னியன் விடுதியில் அமைந்துள்ள மாயன் பெருமாள் கோவிலில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆண்டுதோறும் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில் இன்று வன்னியர் விடுதியில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்று வருகிறது. இன்று காலை 8 மணிக்கு அரசு வழிகாட்டுதல்படி மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள், விழா குழுவினர் ஆகியோர் ஜல்லிக்கட்டு பாதுகாப்பு உறுதிமொழி எடுத்து கொண்டனர். தொடர்ந்து அமைச்சர் மெய்யநாதன் கொடியசைத்து போட்டியை தொடங்கிவைத்தார். முதலில் வாடிவாசல் வழியாக கோவில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. பதிவு செய்யப்பட்ட 800 காளைகள் களத்தில் அவிழ்த்து விடப்பட்டன. அதேபோல் 300 மாடுபிடி வீரர்கள் ஒவ்வொரு சுற்றாக அனுமதிக்கப்பட்டனர்.

கோவில் காளையை தொடர்ந்து புதுக்கோட்டை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த காளைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவிழ்த்து விடப்பட்டு வருகின்றன. காளைகள் வாடிவாசல் வழியாக சீறிபாய்ந்து வந்தன. அதில் பெரும்பாலான காளைகள் மாடுபிடி வீரர்களை கண்டு அஞ்சாமல் அவர்களை துச்சமாக நினைத்து களத்தில் நின்று விளையாடி பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தன. வீரர்களும் சீறிப்பாய்ந்து வந்த காளைகளை அடக்கி பார்வையாளர்களை கவர்ந்தனர்.

போட்டியில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளை உரிமையாளர்களுக்கு அமைச்சர் மெய்யநாதன், மோட்டார் சைக்கிள், கட்டில், பீரோ, எவர் சில்வர் பாத்திரங்கள் பரிசாக வழங்கினார்.

காயமடைந்த வீரர்களுக்கு மருத்து உதவி செய்ய மருத்துவகுழுவினர் தயார் நிலையில் இருந்தனர்.

ஆலங்குடி போலீஸ் டி.எஸ்.பி. தீபக் ரஜினி தலைமையில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## கவர்னருக்கு கருப்பு கொடி காட்ட முயன்ற விடுதலை சிறுத்தை கட்சியினர் 25 பேர் கைது

ஜெயங்கொண்டம், ஜன.18

சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வந்த தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, அங்கிருந்து கார் மூலம் ஸ்ரீரங்கம் புறப்பட்டு சென்றார். அங்கு அவருக்கு பூரண கும்ப மரியாதை தரப்பட்டது. ஸ்ரீரங்கம் பெருமாள் கோவிலில் சாமி தரிசனம் செய்த அவர், தூய்மை பணியிலும் ஈடுபட்டார்.

இதனை தொடர்ந்து அவர் கார் மூலம் மயிலாடுதுறை புறப்பட்டு சென்றார்.



ஜெயங்கொண்டம் வழியாக மயிலாடுதுறை மாவட்டம் சென்ற தமிழக கவர்னர் ஆர்.என்.ரவிக்கு, அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே கருப்பு கொடி காட்டுவதற்கு விடுதலை சிறுத்தைகள் திட்டமிட்டிருந்தனர்.

இதற்காக அவர்கள் ஜெயங்கொண்டம் குறுக்குரோடு சந்திப்பில் திரண்டனர். விடுதலை சிறுத்தை கட்சியினர் மாவட்ட செயலாளர் கதிர்வளவன் தலைமையில் கருப்பு கொடி காட்ட திரண்டிருப்பது, போலீசாருக்கு தகவல்கிடைத்தது. இதனைதொடர்ந்து அங்கு வந்த போலீசார் விடுதலை சிறுத்தைகள் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ஆனால் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டவில்லை. இதனை தொடர்ந்து போலீசார், அவர்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் தனியார் மண்டபத்தில் அடைக்கப்பட்டனர்.

இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது

# பிரதமர் மோடி 21ந் தேதி ஸ்ரீரங்கம் வருகை: பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து போலீசார் ஆலோசனை



திருச்சி, ஜன.18

பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு படை அதிகாரிகளும் ஸ்ரீரங்கம் வந்து ஆய்வு செய்ய உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேகம் வருகிற 22ந் தேதி நடக்கிறது. இந்த விழாவில் பிரதமர்மோடி உள்பட முக்கிய தலைவர்கள், பிரபலங்கள் பங்கேற்கிறார்கள். இந்த விழாவுக்கு முதல் நாளான 21ந் தேதி பிரதமர் மோடி ஸ்ரீரங்கம் கோவிலுக்கு வர உள்ளதாக கூறப்படுகிறது.

ராமர் கோவில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு முன்னதாக 108 வைணவத்தலங்களில் முதன்மையான ஸ்ரீரங்கம் ரெங்கநாதரை தரிசித்துவிட்டு அயோத்தி செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் பிரதமர் மோடி ஸ்ரீரங்கத்துக்கு வர உள்ளதாக கூறப்படுகிறது.

பிரதமர் வருகையை முன்னிட்டு உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது குறித்தும், பிரதமர் விமான நிலையத்தில் இருந்து கோவிலுக்கு வரும் வழித்தடம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்தும் உயர் போலீஸ் அதிகாரிகள் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறார்கள். மேலும், பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு படை அதிகாரிகளும் ஸ்ரீரங்கம் வந்து ஆய்வு செய்ய உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் 18 பேரை 2 படகுகளுடன் இலங்கை கடற்படை கைது செய்தது



சென்னை, ஜன.18

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்கள் 12 பேரைகடந்த 13 ம் தேதி இலங்கை கடற்படை செய்தது .

இலங்கை சிறையில் உள்ள தமிழ்நாடு மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய மந்திரி ஜெய்சங்கருக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

இந்நிலையில், இன்று எல்லை தாண்டி மீன்பிடித்ததாக ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் 18 பேரை 2 படகுகளுடன் இலங்கை கடற்படை கைது செய்தது.

இலங்கை மன்னார்தாள்வுபாடு கடற்பரப்பில் மீன்பிடித்தபோது ராமநாதபுரம் மீனவர்கள் 18 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.

# அரசு முன்னெடுக்கும் 'அறிவுத் திருவிழாவில்' பங்கேற்றுப் பயன்பெறுங்கள் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின்



சென்னை, ஜன.18

அரசு முன்னெடுக்கும் அறிவுத்திருவிழாவில் பங்கேற்றுப் பயன்பெறுங்கள் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின்

தொழிற்கல்வி சார்ந்த 200 நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படவுள்ளன.

முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளபதிவில், தமிழ்நாட்டில் நமது அரசு முன்னெடுக்கும் அறிவியக்கத்துக்கு அத்தாட்சியாக கடந்த ஆண்டு முதல் சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சியை நடத்தி வருகிறோம்.இந்தஆண்டு சுமார் 40 உலக நாடுகள், 10 இந்திய மாநிலங்களின் பங்கேற்புடன் 50 மொழிகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொள்ளும் #CIBF2024 இன்று தொடங்கி 18ஆம் தேதி வரை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற இருக்கிறது.

தொழிற்கல்வி சார்ந்த 200 நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படவுள்ளன. பல்வேறு கருத்தரங்குகள், விவாதங்கள் நடைபெறுகின்றன. எழுத்தாளர்களுக்கும் வெளிநாட்டுப் பதிப்பு நிறுவனங்களுக்கும் இடையே பாலமாக 20 இலக்கிய முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்ப் படைப்பாளிகள் உலகெங்கும் சென்று சேரவும், உலக மொழிகளில் உள்ள அறிவுச் செல்வத்தைத் தமிழில் ஆக்கி அளிக்கவும் பெரும் பொருட்செலவில் நமது அரசு முன்னெடுக்கும் இந்த உலக அளவிலான அறிவுத்திருவிழாவில் அனைவரும் பங்கேற்றுப் பயன்பெறுங்கள். என தெரிவித்துள்ளார்

# தமிழகம் முழுவதும் மாட்டுப்பொங்கல் கொண்டாட்டம் கால்நடைகளுக்கு நன்றி செலுத்திய விவசாயிகள்

சென்னை, ஜன.18

தமிழகம் முழுவதும் மாட்டுப்பொங்கல் கொண்டாட்டம்.. கால்நடைகளுக்கு நன்றி செலுத்திய விவசாயிகள்

கால்நடைகளை போற்றும் வண்ணம், தமிழகம் முழுவதும் மாட்டுப்பொங்கல் வெகு உற்சாகமாக கொண்டாடப்பட்டது.

தைப்பொங்கல் தினத்தில் சூரியனுக்கு நன்றி செலுத்தும் வண்ணம், பொங்கல் படையலிட்டு அனைவரும் வணங்கினர். அதனை தொடர்ந்து 2ம் நாளில் மாட்டு பொங்கல் உற்சாகமாக கொண்டாடப்பட்டது. உழவுக்கு உயிரூட்டும் விதமாகவும், விவசாயத்திற்கு பயன்படும் கால்நடைகளுக்கு நன்றி சொல்லும் விதமாகவும் மாட்டுப் பொங்கல் திருவிழா தமிழர்களால் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது.

விவசாயிகளின் நண்பன், உழவனின் உயிர்த்தோழனாக இருந்து உழைத்த கால்நடைகளை போற்றி நன்றி கூறும் வகையில் விருந்து படைத்து,

நன்றிக்கடன் செய்யப் பெறும் நிகழ்வே மாட்டும் பொங்கலாகும். பொங்கல் பொங்குவதால் பட்டி பெருகும் என்பது ஐதீகம்.

அதன்படி.. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் மாட்டு பொங்கல் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. அதன் ஒரு பகுதியாக, வேளாண்மைக்கு உதவும் மாடுகளின் தொழுவத்தை சுத்தம் செய்து அதன் உரிமையாளர்கள் கால்நடைகளை குளிப்பாட்டினர்.



பின்னர், மாடுகளின் கொம்புகளை சீவி, வர்ணங்கள் பூசி, கூரான கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டி விட்டு அழகு சேர்த்தனர். கழுத்துக்கு தோலிலான வார் பட்டையில் சலங்கை கட்டி, திருநீறு பூசி, குங்குமப்பொட்டு வைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மாடுகளுக்கு புதிய மூக்கணாங் கயிறு, தாம்புக் கயிறு அணிவித்தும், உழவுக் கருவிகளை சுத்தம் செய்தும் மாட்டுப் பொங்கலுக்கு தயாராகினர். பின்னர், வழிபாடு நடத்தி மாடுகளுக்கு பொங்கல், கரும்பு, வாழைப்பழம் ஆகியவற்றை ஊட்டி பொங்கல் பண்டிகையை உற்சாகமாக கொண்டாடினர்.

# நண்பருக்காக நியாயம் கேட்க சென்ற இளைஞர் குத்திக் கொலை: ஓசூர் அருகே அதிர்ச்சி

கிருஷ்ணகிரி,

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகேயுள்ள நந்திமங்கலம் கிராமத்தை சேர்ந்தவர் உதயகுமார். இவருடைய நண்பர் மஞ்சுநாத். மஞ்சுநாத்தை எம்.காரப்பள்ளி கிராமத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் மதுபோதையில் தகாத வார்த்தைகளில் திட்டி சண்டைக்கு அழைத்ததாக கூறப்படுகிறது. இதை மஞ்சுநாத் உதயகுமாரிடம் தெரிவிக்க, இருவரும் அந்த இளைஞரை தட்டிக்கேட்க சென்றுள்ளனர்.

இதில், இரு தரப்புக்கும் இடையே ஏற்பட்ட தகராறில், மஞ்சுநாத்தும், உதயகுமாரும் கத்தியால் குத்தி தாக்கப்பட்ட நிலையில், உதயகுமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. படுகாயமடைந்த மஞ்சுநாத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், இதன் பின்னணி குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நெல்லையப்பர் கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



நெல்லை, ஜன.18

நெல்லையப்பர் கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

கொடி பட்டம் பல்லக்கில் உட்பிரகாரத்தில் வீதி உலா எடுத்துவரப்பட்டு சுவாமி சன்னதி முன்பு அமைந்துள்ள கொடிமரத்தில் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு கொடியேற்றம் நடைபெற்றது.

நெல்லையப்பர் கோவிலில் தைப்பூச திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது. நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவிலில் ஆண்டுதோறும் தைப்பூச திருவிழா விமரிசையாக நடைபெறும். இந்த ஆண்டு தைப்பூச திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

அதிகாலையில் சுவாமி, அம்பாளுக்கு சிறப்பு அபிஷேகம், பூஜைகள் நடைபெற்றது. இதை தொடர்ந்து காலை 6.30 மணி அளவில் கோவில் கொடிமரத்தில் வேத மந்திரங்கள் முழங்க கொடி ஏற்றப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர். இதன் தொடர்ச்சியாக வருகிற 19ந்தேதி (வெள்ளிக்கிழமை) பகல் 12 மணிக்கு நெல்லுக்கு வேலியிட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அன்று இரவு 7 மணிக்கு பஞ்ச மூர்த்திகளுடன் சுவாமி, அம்பாள் வீதி உலா செல்லும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

25ந்தேதி (வியாழக்கிழமை) தைப்பூசதீர்த்தவாரி நடைபெறுகிறது. அன்று நண்பகலில் நெல்லையப்பர், காந்திமதி அம்பாள், அகஸ்தியர், தாமிரபரணி, குங்கிலிய நாயனார், சண்டிகேஸ்வரர் மற்றும் அஸ்திர தேவர் அஸ்திர தேவி ஆகியோர் நெல்லையப்பர் கோவிலிலில் இருந்து கைலாசபுரம் தைப்பூச மண்டபத்துக்கு வந்து எழுந்தருளுகிறார்கள். அங்கு தாமிரபரணி ஆற்றில் தீர்த்தவாரி நடைபெற்று சிறப்பு தீபாராதனை காண்பிக்கப்படுகிறது.

26ந்தேதி சவுந்தர சபாவில், பிருங்கி ரத முனி சிரேஷ்டர்களுக்கு திருநடனம் காட்சி அருளும் நிகழ்ச்சியும், 27ந்தேதி சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சந்திர புஷ்கரணி தெப்பக்குளத்தில் பஞ்ச மூர்த்திகளுடன் தெப்ப உற்சவமும் நடைபெறுகிறது.

# 'நான் உன்ன விட்டு எங்கயும் போகல' பிரேமலதாவிடம் விஜயகாந்த் குரலில் அருள்வாக்கு கூறிய சாமியார்



சென்னை, ஜன.18

நான் உன்ன விட்டு எங்கயும் போகல பிரேமலதாவிடம் விஜயகாந்த்குரலில்அருள்வாக்கு கூறிய சாமியார்

விஜயகாந்த் நினைவிடத்திற்கு ஏராளமானோர் தினமும் வந்து அஞ்சலி செலுத்தி செல்கின்றனர்.

தே.மு.தி.க. தலைவரும், நடிகருமான விஜயகாந்த் கடந்த 28ந்தேதி மரணம் அடைந்தார். அவரது உடல் சென்னை கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க. அலுவலக வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. தற்போது, அவரது நினைவிடத்திற்கு திரையுலக பிரபலங்கள், அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் என ஏராளமானோர் தினமும் வந்து அஞ்சலி செலுத்தி செல்கின்றனர்.

இந்நிலையில் பிரேமலதா விஜயகாந்த் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு விஜயகாந்த் நினைவிடத்திற்கு அன்னதானம் வழங்குவதற்காக வந்திருந்தார். அப்போது அங்கு வந்த சாமியார் ஒருவர், காசி விஸ்வநாதர் தன் கனவில் தோன்றி, விஜயகாந்த் சமாதிக்கு சென்று சங்கு ஊதும்படி கூறியதாகவும், அதனாலேயே இங்கு வந்ததாகவும் கூறினார்.

மேலும் அவர் 'கேப்டன் எங்கும் போகவில்லை, உங்கள் மூத்தமகன் உருவில் உங்களுடன் இருக்கிறார்' என்றார். பின்னர் திடீரென அருள் வந்தது போல் கேப்டன் குரலில் பேசிய அவர், 'என்னை பத்தி தெரியுமில்ல? இந்த ஏழை எளிய மக்களைவிட்டுட்டு நான் எங்க போகப்போறேன். பிரேமா உன் இதயத்தில்தான் நான் குடியிருக்கிறேன்.

நான் உன்ன விட்டு எங்கயும் போகல' என கூறினார். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# விறுவிறுப்பாக நடைபெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு நிறைவு: 14 காளைகளை அடக்கிய வீரருக்கு கார் பரிசு





மதுரை, ஜன.17

பொங்கல் விழாவையொட்டி மதுரை மாவட்டத்தில் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறும். இதில் நேற்று அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி சிறப்பாக நடைபெற்றது. இந்த நிலையில், இன்று புகழ் பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்று வந்தது.

இன்று புகழ்பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. ஜல்லிக்கட்டு போட்டியை ஆட்சியர் சங்கீதா மற்றும் அமைச்சர் மூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத்தனர். பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டிக்காக மொத்தம் 3,677 காளைகளுடன், 1,412 மாடுபிடி வீரர்கள் ஆன்லைன் மூலமாக முன்பதிவு செய்தனர். இதில் 1,000 காளைகளுடன், 700 மாடுபிடி வீரர்களுக்கு போட்டியில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் மொத்தம் 10 சுற்றுகளாக நடைபெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி தற்போது நிறைவடைந்துள்ளது. இந்த ஜல்லிக்கட்டில் 14 காளைகளை அடக்கி மதுரை பொதும்பு பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் என்பவர் முதலிடம் பிடித்துள்ளார். 2020, 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் பாலமேட்டில் முதல் பரிசை வென்றவர் என்ற பெருமையை பெற்றவர் பொதும்பு பிரபாகரன்.

மேலும் சின்னப்பட்டியைச்சேர்ந்த தமிழரசன் 11 காளைகளை அடக்கி இரண்டாவது இடமும், கொந்தகை பகுதியைச் சேர்ந்த பாண்டீஸ்வரன் 8 காளைகள் பிடித்து மூன்றாம் இடம் பிடித்துள்ளார். முதலிடம் பிடித்த பிரபாகரனுக்கு தமிழக அரசு சார்பில் கார் பரிசாக வழங்கப்பட இருக்கிறது.

சிறந்த காளையாக புதுக்கோட்டை ராக்கெட் சின்னகருப்பு காளை தேர்வு செய்யப்பட்டு உள்ளது. அந்த காளையின் உரிமையாளருக்கும் தமிழக அரசு சார்பில் கார் பரிசாக வழங்கப்பட இருக்கிறது.

42 பேர் காயம் : பாலமேட்டில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் 14 மாடுபிடி வீரர்கள், 9 காளை உரிமையாளர்கள், 16 பார்வையாளர்கள், 3 காவலர்கள் உட்பட 42 பேர் காயமடைந்துள்ளனர். இதில் ஒன்பது பேர் மேல் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# நீலகிரி: மின்மாற்றி மீது அரசு பஸ் மோதி விபத்து மின்சாரம் பாய்ந்து டிரைவர் உள்பட 2 பேர் பலி



நீலகிரி, ஜன.18

கூடலூரில் இருந்து அய்யன்கோள்ளி நோக்கி நேற்று இரவு அரசு பஸ் சென்று கொண்டிருந்தது.

நீலகிரி மாவட்டம் கூடலூரில் இருந்து அய்யன்கோள்ளிக்கு நேற்று இரவு அரசு பஸ் சென்று கொண்டிருந்தது. மலைப்பாங்கான சாலையில் சென்ற போது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் சாலையோரம் இருந்த மின்மாற்றி (டிரான்ஸ்பார்மர்) மீது மோதியது.

இதனால், பஸ்சில் மின்சாரம் பாய்ந்தது. இதில், பஸ் டிரைவர், பயணி என 2 பேர் மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், சில பயணிகள் மின்சாரம் பாய்ந்ததில் மயக்கம் அடைந்தனர்.

இது குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்டவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், உயிரிழந்த 2 பேரின் உடலையும் பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்தனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

# டாஸ்மாக் கடையில் திருட்டு... காவலாளியை கட்டி வைத்து கொள்ளையடித்த மர்மநபர்கள்

அரியலூர், ஜன.18

காவலாளியை கை, கால்களை கட்டி வைத்த கொள்ளையர்கள், வாயில் துணியை வைத்து அடைத்து கொள்ளையடித்துள்ளனர்.



டாஸ்மாக் கடைக்குள் புகுந்து சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான 30 பெட்டி மதுபானங்களை திருடிச் சென்ற மர்ம நபர்களை அரியலூர் போலீசார் தேடி வருகின்றனர். அரியலூர் மாவட்டம் கல்லூர் பாலத்தில் இயங்கி வரும் டாஸ்மாக்கில் இந்த கொள்ளைச் சம்பவம் அரங்கேறியிருக்கிறது. டாஸ்மாக் காவலாளியான அப்துல் ரத்தீப் என்பவரை பிடித்து, கை, கால்களை கட்டி வைத்த கொள்ளையர்கள், வாயில் துணியை வைத்து அடைத்து கொள்ளையடித்துள்ளனர்.

சுமார் ரூ.2 லட்சம் மதிப்பிலான 30 பெட்டி மதுபானங்கள் திருடப்பட்டிருப்பது தெரியவர, சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார், சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் குரங்கு குல்லா அணிந்திருந்த கொள்ளையர்களை வலை வீசி தேடி வருகின்றனர்.

# ஆயி அவர்களின் கல்விக்கான அரும்பணி காலத்திற்கும் நிலைத்திருக்கும்... அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

சென்னை, ஜன.18

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

அழியா கல்வி செல்வத்தை அடுத்தடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்த்திட துணை நிற்கும் வகையில், பெரும் மதிப்புள்ள தனது ஒன்றரை ஏக்கர் நிலத்தை மதுரை கொடிக்குளம் அரசு நடுநிலைப்பள்ளிக்கு கொடையாக வழங்கியுள்ள ஆயி என்கிற பூரணம் அம்மாளை இன்று அவருடைய வீட்டில் நேரில் சந்தித்து வாழ்த்தினோம்.



மறைந்த தனது மகள் ஜனனியின் நினைவாக இந்த மகத்தான சேவையை செய்திருக்கும் அவருக்கு, குடியரசு தினத்தன்று நம் முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சரின் சிறப்பு விருதினை அறிவித்துள்ள நிலையில், நாம் நினைவுப் பரிசை வழங்கி அவரை கவுரவித்தோம். 'அவரின் மகளுடைய திருவுருவப்படத்துக்கு மலர் தூவி மரியாதை செய்தோம்.

ஆயி அவர்களின் கல்விக்கான அரும்பணி காலத்திற்கும் நிலைத்திருக்கும் என கூறியுள்ளார்.

அழியா கல்வி செல்வத்தை அடுத்தடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்த்திட துணை நிற்கும் வகையில், பெரும் மதிப்புள்ள தனது ஒன்றரை ஏக்கர் நிலத்தை மதுரை கொடிக்குளம் அரசு நடுநிலைப்பள்ளிக்கு கொடையாக வழங்கியுள்ள ஆயி என்கிற பூரணம் அம்மாளை அவருடைய வீட்டில் நேரில் சந்தித்து வாழ்த்தினோம்.

# விழுப்புரம் அருகே ஆண்கள் மட்டும் பங்கேற்று பொங்கல் வைக்கும் விநோத திருவிழா

விழுப்புரம், ஜன.18

விழுப்புரம் அருகே ஆண்கள் மட்டும் பங்கேற்று பொங்கல் வைக்கும் விநோத திருவிழா



அப்பகுதி ஆண்கள், குளக்கரையில் புதுப்பானையில் பொங்கல் வைத்து சாமிக்கு படையலிட்டு வழிபட்டனர்.

தமிழ் மக்களின் கலாசார பண்பாட்டு வரலாற்றில் பொங்கல் பண்டிகைக்கு என்று தனி இடம் உண்டு. இயற்கை தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் மக்கள் தங்கள் நன்றியினை உரித்தாக்கும் விதமாகவே இந்த பண்டிகை கொண்டாடப்படுகிறது.

அதிகாலையிலேயே பெண்கள் தங்கள் வீடுகளில் பல வண்ண கோலங்களை போட்டு பொங்கல் பண்டிகையை வரவேற்றனர். பிறகு புதுப்பானையில் புத்தரிசியிட்டு சர்க்கரை பொங்கல் வைத்தனர். இந்த நிலையில் விழுப்புரம் மாவட்டம் வானூர் அருகே ஆண்கள் மட்டும் பங்கேற்று பொங்கல் வைக்கும் விநோத திருவிழா நடைபெற்றது. நைனார் மண்டபம் பகுதியில் ஆண்டுதோறும் ஆண்கள் மட்டும் பொங்கல் வைப்பது வழக்கம்.

அந்த வகையில், இந்தாண்டு அய்யனார் கோவிலில் கூடிய அப்பகுதி ஆண்கள், குளக்கரையில் புதுப்பானையில் பொங்கல் வைத்து சாமிக்கு படையலிட்டு வழிபட்டனர். மூதாதையர்களின் வழக்கப்படி இவ்வாறு பொங்கலிட்டால் விவசாயம் செழிக்கும் என அப்பகுதி மக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

# திருமணம் செய்து கொள்கிறேன் என கூறி பிளஸ்1 மாணவியை பாலியல் பலாத்காரம் செய்த வாலிபரை போலீசார் கைது

நாகர்கோவில், ஜன.18

நாகர்கோவில் மேலகலுங்கடியை சேர்ந்தவர் வசந்தராஜ் (வயது 23), தொழிலாளி. இவருக்கும், நாகர்கோவிலில் உள்ள ஒரு பள்ளியில் பிளஸ்1 படிக்கும் மாணவிக்கும் இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த பழக்கம் அவர்களுக்கிடையே நெருக்கத்தை ஏற்படுத்தியது.



ஒரு கட்டத்தில் மாணவியை வசந்தராஜ், தனது நண்பரின் வீட்டுக்கு வருமாறு அழைத்தார். இதை நம்பி மாணவியும் அங்கு சென்றுள்ளார். அப்போது வீட்டில் யாரும் இல்லை. வசந்தராஜ் மட்டுமே இருந்தார். அந்த சமயத்தில் மாணவியிடம் அவர் ஆசை வார்த்தைகளை அள்ளி வீசினார். உன்னை எனக்கு ரொம்ப பிடிக்கும், விரைவில் திருமணம் செய்து கொள்கிறேன் என கூறியபடி அவரை தன்வசப்படுத்தி பாலியல் பலாத்காரம் செய்தார். பின்னர் 3 நாட்களும் அங்கேயே சிறை வைத்து மாணவியின் வாழ்க்கையை சீரழித்தார்.

மேலும் இந்த சம்பவத்தை வெளியே கூறக்கூடாது என மிரட்டல் விடுத்துள்ளார். பின்னர் வீடு திரும்பிய மாணவி, நடந்த விவரத்தை தாயாரிடம் கூறி கதறி அழுதார். இதனை கேட்டு அதிர்ச்சி அடைந்த அவர் நாகர்கோவில் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் வசந்தராஜ் மீது போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர்.

கைதான வசந்தராஜ் மீது ஏற்கனவே ஒரு போக்சோ வழக்கு கடந்த 2020ம் ஆண்டு பதிவாகி உள்ளது. இதுதவிர வடசேரி போலீஸ் நிலையத்தில் திருட்டு வழக்கும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

4 வருடங்களுக்கு முன்பு ஏற்கனவே ஒரு சிறுமியின் வாழ்க்கையை சீரழித்த நிலையில் வசந்தராஜ் தற்போது மற்றொரு மாணவியை பலாத்காரம் செய்துள்ளார். இதேபோன்று அவரால் ஏமாற்றப்பட்ட இளம்வயது பெண்கள் யாரேனும் உள்ளார்களா? என போலீசார் சந்தேகிக்கின்றனர். அதே சமயத்தில் வசந்தராஜால் பாதிக்கப்பட்டவர்கள்யாரேனும் இருந்தால் துணிச்சலாக புகார் கொடுக்கலாம். அந்த பெண்ணின் முகவரி எதுவும் வெளியிடப்படாது என போலீசார் தெரிவித்துள்ளனர்.

கைதான வசந்தராஜை மருத்துவ பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு போலீசார் அழைத்து சென்றனர். அப்போது போலீசார் தன்னை தாக்கியதாக வசந்தராஜ் கூறியுள்ளார்.

ஆனால் டாக்டர்கள் பரிசோதித்து பார்த்தபோது அவரது உடலில் காயம் எதுவும் இல்லை. இதன் மூலம் அவர் நாடகமாடியது தெரியவந்தது. வசந்தராஜ் இதற்கு முன்பு போக்சோ வழக்கிலும், திருட்டு வழக்கிலும் போலீசில் சிக்கியபோதும் இதுபோல போலீசார் தன்னை தாக்குவதாக கூறி நடகமாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மகளுக்கு பொங்கல் சீர் கொடுக்க கரும்பு கட்டு சுமந்தபடி 17 கி.மீ. தூரம் சைக்கிளில் சென்ற 80வயது விவசாயி

புதுக்கோட்டை, ஜன.18

வம்பன் 4 ரோடு பகுதியில் இருந்து சுமார் 17 கிலோ மீட்டர் தூரம் சைக்கிளிலேயே 80 வயது விவசாயி பொங்கல் சீர் கொண்டு சென்றதை சாலை நெடுகிலும் உள்ள பொதுமக்கள் பார்த்து வியந்தனர்.



தமிழர்களின் திருநாளாம் பொங்கல் பண்டிகை இன்று (திங்கட்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. இதனை முன்னிட்டு தமிழர்களின் பாரம்பரியமும், கலாசாரமுமாக உள்ள பொங்கல் சீர் கொடுக்கும் நிகழ்ச்சி பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருகிறது. குறிப்பாக திருமணம் செய்து கொடுக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு அவரது பெற்றோர்கள் தங்களது வசதிக்கேற்ப பொங்கல் சீர் வழங்குவது தமிழர்களின் வாடிக்கையாக உள்ளது. அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்திலும், 80 வயதுடைய முதியவர் ஒருவர் தனது மகளுக்கு தற்போதும் சைக்கிளில் சென்று சீர் கொடுத்து வருகிறார். அந்த ருசிகர சம்பவம் பற்றிய விவரம் வருமாறு:

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி அருகே வடக்கு கொத்தக்கோட்டை கிராமத்தை சேர்ந்தவர் செல்லத்துரை (வயது 80). விவசாயி. இவரது மனைவி அமிர்தவள்ளி. இவர்களுக்கு சுந்தராம்பாள் என்ற மகளும், முருகேசன் என்ற மகனும் உள்ளனர். சுந்தராம்பாளுக்கு திருமணம் முடிந்து 12 ஆண்டுகளுக்கு பிறகு இரட்டை குழந்தை பிறந்தது. அன்று முதல் இன்று வரை செல்லத்துரை தனது மகளுக்கு பொங்கல் சீர் கொடுத்து வருகிறார்.

மேலும் இவர் 80 வயதிலும், அவரது சைக்கிளில் தேங்காய், பழம், மஞ்சள் கொத்து, வேட்டி, துண்டு, பொங்கல் பூ, பச்சரிசி, வெல்லம் உள்ளிட்ட பல்வேறு வகையான பொங்கல் பொருட்களை வைத்துக் கொண்டும், 5 கரும்புகள் அடங்கிய கட்டை தலையில் சுமந்தபடியும் சைக்கிளில் சென்றார். வம்பன் 4 ரோடு பகுதியில் இருந்து சுமார் 17 கிலோ மீட்டர் தூரம் சைக்கிளிலேயே அவர் பொங்கல் சீர் கொண்டு சென்றதை சாலை நெடுகிலும் உள்ள பொதுமக்கள் பார்த்து வியந்தனர். சிலர் தங்களது செல்போன்களில் படம் பிடித்தும் கொண்டனர்.

# சுற்றுலா தலங்களில் லட்சக்கணக்கில் மக்கள் குவிந்தனர்



சென்னை, ஜன.19

தமிழகத்தில் இன்று காணும் பொங்கல் பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்படுகிறது. இதையொட்டி சுற்றுலா தலங்களில் பொதுமக்கள் கூட்டம் அலைமோதுகிறது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று காணும் பொங்கல் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இதையொட்டி கடற்கரைகள் மற்றும் சுற்றுலா தலங்களில் லட்சக்கணக்கில் மக்கள் குவிந்தனர்.

சென்னை மெரினா கடற்கரைக்கு காணும் பொங்கலையொட்டி இன்று காலை 11 மணியில் இருந்தே பொதுமக்கள் வரத் தொடங்கினார்கள். நேரம் செல்லச்செல்ல பொதுமக்களின் கூட்டம் அதிகரிக்க தொடங்கியது. சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களை சேர்ந்த மக்கள் குடும்பத்துடன் மெரினா கடற்கரைக்கு வந்திருந்தனர். பிற்பகலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் மெரினா கடற்கரையில் குவிந்தனர்.

அவர்கள் கடற்கரை மணலில்ஒன்றாகஅமர்ந்து பொழுதை போக்கினார்கள். குழந்தைகள் கடற்கரை மணலில் உற்சாகமாக விளையாடினார்கள். தொடர்ந்து பொதுமக்கள் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இதன்காரணமாகமெரினா கடற்கரை முழுவதும் பொதுமக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது.

மெரினா கடற்கரையில் மக்கள் கூட்டத்தை பயன்படுத்தி பிக்பாக்கெட் மற்றும் திருட்டு சம்பவங்களில் ஈடுபடுபவர்களை பிடிக்கவும், பெண்களிடம் அத்துமீறுபவர்களை கட்டுப்படுத்தவும் போலீஸ் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு இருந்தது. போலீஸ் கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் உத்தரவின் பேரில், தென் சென்னை கூடுதல் கமிஷனர் பிரேமானந்த் சின்கா, இணை கமிஷனர் தர்மராஜன் மேற்பார்வையில் மெரினா கடற்கரை முழுவதும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது.

உழைப்பாளர் சிலை முதல் காந்தி சிலை வரை 3 இடங்களில் தற்காலிக போலீஸ் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு உள்ளன. 12 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்கள் ஏற்படுத்தப்பட்டு 13 கேமராக்களும் கூடுதலாக பொருத்தப்பட்டுள்ளது. கண்காணிப்பு கோபுரங்களில் நின்றபடி 3 போலீசார் பைனாகுலர் மூலம் கண்காணித்தனர்.

மெரினாவில் இன்று கடலில் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதற்காக கடற்கரையோரம் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. 200க்கும் மேற்பட்ட நீச்சல்பயிற்சிபெற்ற போலீசார் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்ட பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். குதிரைப்படையினருடன், கடற்கரை மணல் பரப்பில் செல்லக்கூடிய 3 வாகனங்கள் மூலமாகவும் ரோந்து சென்றுபோலீசார் கண்காணித்தனர். மேலும் டிரோன் கேமராக்கள் மூலமாகவும் போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். மெரினா கடற்கரைக்கு வந்த மக்கள் அங்கிருந்துஅருகில்உள்ள தீவுத்திடலுக்கு சென்று அங்கு நடைபெற்று வரும் சுற்றுலா பொருட்காட்சியையும் கண்டுகளித்தனர். அங்கு அரசு சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டனர். தனியார் அரங்குகளையும்சுற்றிப்பார்த்தனர். மேலும் பொழுதுபோக்கு விளையாட்டுகளிலும் விளையாடி மகிழ்ந்தனர். அங்குள்ள உணவகங்களில் தங்களுக்கு பிடித்த உணவு வகைகளையும் உண்டனர்.

மாமல்லபுரத்தில்இன்று காலையிலேயே சுற்றுலா பயணிகள் கூட்டம் குவிந்தது. உள்நாட்டு பயணிகள் மற்றும் வெளிநாட்டு பயணிகள் அங்குள்ள புராதன சின்னங்களான அர்ச்சுனன் தபசு, வெண்ணை உருண்டைக்கல், கடற்கரை கோவில், ஐந்து ரதம், புலிக்குகை பகுதிகளுக்கு குடும்பம், குடும்பமாக வந்து பார்வையிட்டு புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

பயணிகளின் வசதிக்காக செங்கல்பட்டு, தாம்பரம், திருவான்மியூரில் இருந்து மாமல்லபுரத்துக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. வாகன நெரிசலை தவிர்க்க போக்குவரத்து போலீசார் அனைத்து வாகனங்களையும் கிழக்கு கடற்கரை சாலை, பூஞ்சேரி பகுதியில் நிறுத்த ஏற்பாடு செய்தனர். மாமல்லபுரம் நகருக்குள் மினி பஸ்கள் மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. சுற்றுலா பயணிகள் 3 கி.மீ தூரம் நடந்து சென்றே புராதன சின்னங்களை பார்க்க வேண்டியது இருப்பதால், அனுமதி பெற்ற உள்ளூர் ஆட்டோக்கள் சிலவற்றை நகருக்குள் இயக்க போலீசார் ஏற்பாடு செய்தனர். மாமல்லபுரத்தில் 200க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். குற்றச்செயல்களில் ஈடுபடுவோர், பெண்களிடம் அத்துமீறலில் ஈடுபடுவோர், போதை ஆசாமிகளை கண்காணிக்க சாதாரண உடையில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள கேளிக்கை பூங்காக்கள், முட்டுக்காடு படகு குழாம், கோவளம் கடற்கரை, வடநெம்மேலி முதலை பண்ணை, திருவிடந்தை கடற்கரை உள்ளிட்ட சுற்றுலா தலங்களிலும் மக்கள் கூட்டம் அதிக அளவில் காணப்பட்டது.

சென்னை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் ஏராளமான விலங்குகள் மற்றும் பறவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பொங்கல் பண்டிகையையொட்டி வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு கடந்த 2 நாட்களில் 37 ஆயிரம் பேர் வருகை தந்து விலங்குகள் மற்றும் பறவைகளை பார்த்துள்ளனர்.

இந்த நிலையில் காணும் பொங்கலையொட்டி இன்று காலையில் இருந்தே வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு சுற்றுலா பயணிகள் வரத் தொடங்கினார்கள். நேரம் செல்லச் செல்ல பொதுமக்களின் வருகை அதிகரிக்க தொடங்கியது. சென்னை மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த ஏராளமானோர் வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு வந்தனர். அவர்கள் அங்குள்ள விலங்குகள், பறவைகளை பார்வையிட்டனர். சிங்கம், புலி, வெள்ளைப் புலி, யானை, காண்டாமிருகம், மனித குரங்கு, ஒட்டகச்சிவிங்கி, குதிரைகள், பறவைகள், பாம்புகள் ஆகியவற்றை பார்த்தனர். உயிரியல் பூங்காவில் புதிதாக வந்துள்ள உயிரினங்களான இருவாச்சி பறவை, மலேயன் ராட்சத அணில், ஜம்முவிலிருந்து கொண்டு வரப்பட்ட இமாலயன் கருப்பு கரடி, சிவப்பு மார்பக கிளி ஆகியவற்றையும் கண்டுகளித்தனர்.

காணும் பொங்கலையொட்டி சென்னை பழவேற்காட்டில் சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் பிற மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வாகனங்களில் வந்தனர். அவர்கள் பழவேற்காடு கடற்கரையை சுற்றி பார்ப்பதற்காக உறவினர்கள், நண்பர்களுடன் கூட்டம் கூட்டமாக வந்துள்ளனர். பழவேற்காட்டில் டச்சு கல்லறை, நிழல் கடிகாரம், பழமை வாய்ந்த சிவன் கோயில், ஆதிநாராயண பெருமாள் கோவில், பழமை வாய்ந்த மசூதி, பழவேற்காடு ஏரி, பழவேற்காடு பறவைகள் சரணாலயம் உள்ளிட்டவைகளை கண்டு கழித்தனர். குடும்பத்துடன் வரும் சுற்றுலா பயணிகள் சமைத்து கொண்டு வந்த உணவுகளை கடற்கரையில் அமர்ந்து உண்டனர். சிலர் அங்கேயே சமைத்து சாப்பிட்டனர். பழவேற்காடு கடலில் குளிப்பதற்கும், படகு சவாரிக்கும் தடை செய்யப்பட்டுள்ளது. 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்ட நிர்வாகம், திருப்பூர் மாநகராட்சி மற்றும் நொய்யல் பண்பாட்டு அமைப்பு இணைந்து நடத்தும் திருப்பூர் பொங்கல் திருவிழா நிகழ்ச்சியில் கலைக்குழுவினருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம். அரிகில் கலெக்டர் கிறிஸ்துராஜ், மேயர் தினேஷ்குமார், ஆணையாளர் பவங்குமார் கிரியப்பனவர், காவல் கண்காணிப்பாளர் சாமிநாதன், துணை காவல் ஆணையாளர் அபிஷேக் குப்தா, திருப்பூர் சார் ஆட்சியர் சௌம்யா ஆனந்த், மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் ஆகியோர் உள்ளனர்.

Title-Code:-TNTAM215.1.
R.Dis No:- 968/2023




## சென்னை ஐகோர்ட்டில் நடிகர் சிவகார்த்திகேயன் தொடர்ந்த வழக்கு முடித்து வைப்பு

'மிஸ்டர் லோக்கல்' படத்திற்காக பெற்ற சம்பளத்திற்கான டி.டி.எஸ். தொகை கட்டப்படாததால், தனது வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை வருமான வரித்துறையினர் பிடித்தம் செய்ததாகவும், அதனை திருப்பி வழங்க உத்தரவிட வேண்டும் எனவும் கோரி நடிகர் சிவகார்த்திகேயன் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது வருமான வரித்துறை தரப்பில் அளிக்கப்பட்ட பதில் மனுவில், நடிகர் சிவகார்த்திகேயன் மற்றும் தயாரிப்பாளர் ஞானவேல் ராஜா இடையே சுமூகமான முடிவு எட்டப்பட்டதைத் தொடர்ந்து டி.டி.எஸ். தொகை கட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் சிவகார்த்திகேயனிடம் பிடித்தம் செய்யப்பட்ட ரூ.12.60 லட்சம் ரூபாயை திருப்பி செலுத்திவிட்டதாகவும் பதிலளிக்கப்பட்டது. இதனை ஏற்ற நீதிபதி, நடிகர் சிவகார்த்திகேயன் தொடர்ந்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

## 4 நாட்களில் ரூ.100 கோடி வசூல்: பாக்ஸ் ஆபிஸில் சாதனை படைத்த ஹனுமான்



இயக்குனர் பிரசாந்த் வர்மா இயக்கத்தில் தயாராகியிருக்கும் படம் 'ஹனுமான்'. இதில் தேஜா சஜ்ஜாகதையின்நாயகனாகநடிக்க,அவருக்குஜோடியாக நடிகை அமிர்தா ஐயர் நடிக்கிறார். இவர்களுடன் வரலட்சுமி சரத்குமார், வினய் ராய், கெட்டப் சீனு, ராஜ் தீபக் ஷெட்டி உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். தாசரதி சிவேந்திரா ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு கௌரஹரி, அனுதீப் தேவ் மற்றும் கிருஷ்ண சவுரப் என மூன்று இசையமைப்பாளர்கள் இணைந்து இசையமைத்துள்ளனர். இந்த படத்தை ப்ரைம் ஷோ என்டர்டெயின்மென்ட் எனும் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் கே.நிரஞ்சன் ரெட்டி தயாரித்துள்ளார். இந்த படம் கடந்த ஆண்டு மே 12ம் தேதி தெலுங்கு, இந்தி, மராத்தி, தமிழ், கன்னடம், மலையாளம் மொழிகளில்பான்இந்தியதிரைப்படமாகவெளியாகும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் சில காரணங்களால் இப்படத்தின்வெளியீடுதள்ளிப்போனது.இந்நிலையில் இந்த படம் பொங்கலை முன்னிட்டு கடந்த 12ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. ஹனுமான் திரைப்படம் வெளியான 4 நாட்களில் உலகளவில் ரூ.100 கோடி வசூலித்து பாக்ஸ் ஆபிஸில் சாதனை படைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து படத்தின் இயக்குனர் பிரசாந்த வர்மா தனது எக்ஸ் வலைதள பக்கத்தில், 'எனது முதல் செஞ்சுரி படம்'எனபதிவிட்டுள்ளார். இந்த படம் பிரசாந்த் வர்மா சினிமாட்டிக் யுனிவர்ஸின் முதல் படமாக வெளியாகி உள்ளது. அடுத்ததாக அதீரா என்ற சூப்பர் ஹீரோ படத்தை பிரசாந்த் வர்மா இயக்க உள்ளார். அதனை தொடர்ந்து 2025ம் ஆண்டு ஹனுமான் படத்தின் 2ம் பாகம் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விஜய் சேதுபதி நடிக்கும் 'மகாராஜா' படத்தின் புதிய போஸ்டர் வெளியானது



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான விஜய் சேதுபதியின் 50வது படமான 'மகாராஜா' திரைப்படத்தை 'குரங்கு பொம்மை'படத்தை இயக்கி பிரபலமடைந்த இயக்குனர்நித்திலன்சுவாமிநாதன்இயக்குகிறார். இப்படத்தில் நட்டி(எ)நட்ராஜ்சுப்ரமணியம்,முனீஷ்காந்த்,அருள்தாஸ்,பாய்ஸ்மணிகண்டன்மற்றும்பலர்முக்கியகதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.பேஷன் ஸ்டுடியோஸ் சுதன் சுந்தரம் மற்றும் தி ரூட் ஜெகதீஷ் பழனிசாமி இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அஜனீஷ் லோக்நாத் இசையமைக்கிறார். தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதி செய்கிறார்.

இப்படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் சமீபத்தில் வெளியானது.இந்நிலையில், விஜய் சேதுபதியின் பிறந்தநாளை முன்னிட்டு 'மகாராஜா' படத்தின் புதிய போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

## மதுபிரியர்களை அடித்து விரட்டிய நடிகர் விஷால்... வைரலாகும் வீடியோ ...!



இயக்குனர் ஹரி இயக்கத்தில் நடிகர் விஷால் கதாநாயகனாக நடித்து வரும் திரைப்படம் 'ரத்னம்'. இந்த படத்தில் விஷாலுக்கு ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்கிறார். மேலும் கவுதம் மேனன், சமுத்திரக்கனி, யோகிபாபு உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

ஜீ ஸ்டுடியோஸ் சவுத் மற்றும் இயக்குனர் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன்பெஞ்ச் பிலிம்ஸ் இணைந்து தயாரிக்கும் இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். இந்த படத்தை இந்த ஆண்டு கோடை விடுமுறையை முன்னிட்டு வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளது. சமீபத்தில் இந்த படத்தின் முதல் பாடல் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில் ரத்னம் படத்தின் படப்பிடிப்பு தளத்தில் அமைக்கப்பட்டு இருந்த டாஸ்மாக் கடை செட்டில் மது வாங்க குவிந்த மதுபிரியர்களை நடிகர் விஷால் அடித்து விரட்டுவது போன்ற வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

அந்த வீடியோவில், டாஸ்மாக் கடை போன்று அமைக்கப்பட்டு இருந்த செட்டில் மதுபிரியர்கள் சிலர் மதுபானம் கேட்டு சண்டையிடுவதும், அப்போது அங்கு வந்த விஷால் அவர்களிடம் 'யோவ் இது ரத்னம் படத்துக்கு போட்ட செட் யா' என கூறி விரட்டுவது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்த வீடியோ மதுபிரியர்கள் செய்யும் சேட்டைகளை விவரிக்கும் விதமாக நகைச்சுவை நோக்கில் எடுக்கப்பட்ட வீடியோ என தெரிவிக்கப்பட்டு உள்ளது. ரத்னம் படப்பிடிப்பு தளத்தில் எடுக்கப்பட்ட இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

## இந்தி மொழி மீது எங்களுக்கு கோபம் இல்லை வைரமுத்து



திருவள்ளுவர்தினத்தையொட்டி சென்னைபெசன்ட்நகரில்அமைந்துள்ள, சென்னைமாநகராட்சிபூங்காவில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு கவிஞர் வைரமுத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் , திருவள்ளுவர் பண்பாட்டின் வரலாற்று அடையாளம். திருக்குறளை படிக்கும்போது நாங்கள் தமிழையே படிக்கிறோம். மும்மொழி கொள்கை என்றால் திணிப்பு என்பதேதமிழர்களின்தீர்க்கமானஎண்ணம்எனக்கூறினார்.இந்திதிணிக்கப்படாதவரைகற்கவேண்டியவர்கள் கற்றுக் கொள்வார்கள். இங்கிருந்து வட மாநிலத்திற்கு செல்வர்கள் இந்தியை கற்றுக் கொள்கிறார்கள். அங்கிருந்து இங்கு தொழிலுக்காக வருபவர்கள் தமிழை கற்றுக் கொள்கிறார்கள். மூன்றாவது மொழி என்பது சூழலாலே உருவாகிறது. இந்தி மொழி மீது எங்களுக்கு கோபம் இல்லை. அச்சம் தான் உள்ளது. இந்த நியாயமான அச்சத்தை உலகம் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். மேலும், இந்தி மொழியை திணித்து தமிழர்களுக்கு அச்சத்தை கொடுக்காமல் பாதுகாப்பை கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக் கொள்கிறோம் என்றார்.



## 3வது டி20 போட்டி; பின் ஆலென் அதிரடி சதம்...நியூசிலாந்து 224 ரன்கள் குவிப்பு...!

ஷகீன் ஷா அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் 2 ஆட்டங்களில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரில் 20 என முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டி20 போட்டி இன்று நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்துக்கான டாசில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து நியூசிலாந்தின் தொடக்க ஆட்டக்காரர்களாக பின் ஆலென் மற்றும் டெவான் கான்வே ஆகியோர் களம் இறங்கினர்.

இதில் ஆலென் அதிரடியில் மிரட்ட மறுமுனையில் கான்வே 7 ரன், அடுத்து களம் இறங்கிய செய்பர்ட் 31 ரன், மிட்செல் 8 ரன், பிலிப்ஸ் 19 ரன், சாம்ப்மென் 1 ரன், சாண்ட்னெர் 4 ரன் எடுத்து அடுத்தடுத்து அவுட் ஆகினர். மறுமுனையில் அதிரடியில் மிரட்டிய ஆலென் சதம் அடித்து அசத்தினார். அவர் 62 பந்தில் 137 ரன்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார்.

இறுதியில் நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 224 ரன்கள் குவித்தது. இதையடுத்து 225 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி ஆட உள்ளது.

## சுப்மன் கில்லும் ஒருநாள் குஜராத் அணியிலிருந்து விலகலாம் முகமது ஷமி கருத்து



இந்தியாவில் நடத்தப்படும் உள்ளூர் டி20 தொடரான ஐபிஎல்ன் 17வது சீசன் இந்த ஆண்டு மார்ச் 23ந் தேதி தொடங்கி மே 29 வரை நடைபெற உள்ளது. இந்த சீசனுக்கான வீரர்கள் ஏலம் கடந்த டிசம்பர் மாதம் 19ந் தேதி துபாயில் நடைபெற்றது. இதில் ஐபிஎல் வரலாற்றில் அதிகபட்சதொகையானரூ.24.75கோடிக்குஆஸ்திரேலிய வீரர் மிட்செல் ஸ்டார்க்கை கொல்கத்தா அணி ஏலத்தில் எடுத்தது. ஐபிஎல் ஏலத்திற்கு முன்னதாக சில அணிகள் தாங்கள் விரும்பும் வீரர்களை மற்ற அணிகளிடமிருந்து டிரேடிங் முறையில் வாங்கி அதற்கான அறிவிப்புகளை வெளியிட்டன. அதில் குறிப்பாக குஜராத் அணியின் கேப்டனாக செயல்பட்ட ஹர்திக் பாண்ட்யாவை மும்பை இந்தியன்ஸ் அணி ரூ.15 கோடிக்கு விலைக்கு வாங்கியது பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் ரோகித் சர்மாவை கேப்டன் பதவியிலிருந்து நீக்கி பாண்ட்யாவை புதிய கேப்டனாக நியமித்தது. குஜராத் அணிக்கு கேப்டனாக நியமிக்கப்பட்ட முதல் வருடத்திலேயே கோப்பையை வென்று கொடுத்த ஹர்திக் பாண்ட்யா, 2வது வருடம் இறுதிப்போட்டி வரை அழைத்து சென்றார். இருப்பினும் தம்மை கேப்டனாக உருவாக்கிய குஜராத் அணியை மறந்த பாண்ட்யா தற்போது மும்பையை வழி நடத்த உள்ளார். அதனால் பாண்ட்யா ஐபிஎல் ரசிகர்களுக்கு மத்தியில் பெரும் விமர்சனத்திற்கு உள்ளானார். ஹர்திக் பாண்ட்யா குஜராத் அணியிலிருந்து விலகிய நிலையில், சுப்மன் கில் புதிய கேப்டனாக நியமிக்கப்பட்டார். இந்நிலையில் புதிய கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ள சுப்மன் கில்லும் ஒரு கட்டத்தில் குஜராத் அணியிலிருந்து விலகுவார் என்று அந்த அணிக்காக விளையாடும் நட்சத்திர வீரர் முகமது ஷமி தெரிவித்துள்ளார். ஏனெனில் கிரிக்கெட்டில் அதெல்லாம் ஒரு அங்கம் என்று தெரிவிக்கும் அவர் இது குறித்து சமீபத்திய பேட்டியில் பேசியது பின்வருமாறு;

"அணியில் யார் இருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. உங்களுக்கு அணியின் சமநிலைதான் முக்கியம். எங்களின் கேப்டனாக இருந்த ஹர்திக் பாண்ட்யா 2 சீசன்களிலும் பைனல் வரை அழைத்து சென்று 2022ல் கோப்பையை வென்று கொடுத்தார். ஆனால் குஜராத்துக்காக வாழ்நாள் முழுவதும் விளையாட பாண்ட்யா ஒப்பந்தம் செய்யப்படவில்லை. மும்பைக்கு சென்றது அவருடைய முடிவு.

தற்போது கேப்டனாகியுள்ள கில் விரைவில் அனுபவத்தை பெறுவார். இருப்பினும் அவரும் ஒருநாள் அணியிலிருந்து விலகலாம். ஏனெனில் விளையாட்டில் இதுவும் ஒரு அங்கமாகும். இங்கே வீரர்கள் வருவார்கள் போவார்கள்.நீங்கள்கேப்டனாகஇருக்கும்போதுஅழுத்தத்தைகையாளுவதுடன்உங்களுடையசெயல்பாடுகளையும் பார்த்துக் கொள்ளவேண்டும். அந்த வகையில் கில் நிறைய சிந்திக்க நேரிடலாம். இருப்பினும் மற்ற வீரர்களும் சிறப்பாக செயல்பட முயற்சிப்பார்கள் என்பதால் அதை பற்றி அவர் கவலைப்பட வேண்டியதில்லை" என்று கூறினார்.

## கலிங்கா சூப்பர் கோப்பை கால்பந்து; சென்னையின் எப்.சி அணி முதல் வெற்றி...!



கலிங்கா சூப்பர் கோப்பை கால்பந்து தொடரின் 4வது சீசன் கடந்த 9ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் ஐஎஸ்எல் தொடரிலிருந்து 12 மற்றும் ஐ லீக்கிலிருந்து 4 என்று மொத்தம் 16 அணிகள்பங்கேற்றுள்ளன. இவை 4 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்களது பிரிவில் இடம்பெற்றுள்ள மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோதும். லீக் சுற்று முடிவில் தங்களது பிரிவுகளில் முதலிடத்தை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும்.

இதில் 'சி' பிரிவில் இடம்பெற்றுள்ள சென்னையின் எப்.சி. தனது முதல் ஆட்டத்தில் பஞ்சாப் அணியுடன் டிரா செய்தது. இந்நிலையில் சென்னையின் எப்.சி. தனது 2வது ஆட்டத்தில் கோகுலம் கேரளா அணியுடன் இன்று மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென்னையின் எப்.சி. 20 என்ற கோல் கணக்கில் கோகுலம் கேரளா அணியை வீழ்த்தி இந்த தொடரில் தனது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது. சென்னை அணி தரப்பில் கானர் ஷீல்ட்ஸ் மற்றும் இர்பான் யாத்வாட் ஆகியோர் தலா 1 கோல் அடித்தனர்.


## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்: முதல் சுற்றில் இகா ஸ்வியாடெக் வெற்றி



டென்னிசில் ஆண்டுதோறும் ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன், விம்பிள்டன், அமெரிக்க ஓபன் என 4 வகையான கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து பெற்ற போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதன்படி ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலியஓபன்டென்னிஸ்தொடர்மெல்போர்னில் நடைபெற்று வருகிறது. பல முன்னணி வீரர், வீராங்கனைகள்பங்கேற்றுள்ள இந்த போட்டி, வருகிற 28ந்தேதி வரை நடக்கவுள்ளது.

இந்த தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் 'நம்பர் ஒன்' வீராங்கனையான இகா ஸ்வியாடெக் (போலந்து), அமெரிக்க வீராங்கனை சோபியா கெனின் உடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் இகாஸ்வியாடெக் 76(72), 62 என்ற செட் கணக்கில் சோபியாவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை ஜெசிகா பெகுலா, கனடாவின் ரெபேக்கா மரினோவுடன் மோதினார். இந்த போட்டியில் பெகுலா 62, 64 என்ற செட் கணக்கில் ரெபேக்காவை வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.



**பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல**

**விளக்கம்:**

பொருள் சேர்க்கும் பொது பழிக்கு அஞ்சிச் சேர்த்து, செலவு செய்யும் போது பகுந்து உண்பதைமேற்க்கொண்டால்,அவ்வாழ்கையின் ஒழுங்கு எப்போதும் குறைவதில்லை.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.